# கிரைஸ்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

கீழச்சேரி திருவள்ளூர் மாவட்டம் - 631402

# தமிழ்த்துறை

## கணித்தமிழ்ப் பேரவை - கருத்தரங்கம்

**(2025 - 2026)**

**செயற்கை நுண்ணறிவில் தமிழ்.**

**நாள் : 01 . 08 . 2025**

**இடம் : S. M. R கலையரங்கம்**

**நேரம் : 11.45**



சிறப்பு விருந்தினர்

**திரு. சே. அருண்குமார்,**

தமிழாசிரியர்,

பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி,

( அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி), காஞ்சிபுரம் - 631552

செயலர்:

அருட்தந்தை முனைவர். ஜா. ஹாரி வில்லியம்ஸ்

முதல்வர்:

அருட்தந்தை முனைவர். அருள்மணி ஜோசப் ராஜ்

துணை முதல்வர்:

முனைவர். சி. அரவிந்தன்



கலைப்புல முதன்மையர்:

முனைவர் . அ. சுரேஷ்குமார்

அறிவியல்புல முதன்மையர்:

அருட்தந்தை. வி. பிரதீப் கிறிஸ்டோபர்

துறைத்தலைவர்

விஜயலட்சுமி .கோ

ஒருங்கிணைப்பாளர்

ஜெயபிரியா . ர

# கிறைஸ்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## கீழச்சேரி - 631402

## கணித்தமிழ்ப் பேரவை (2025 - 2026)

## செயற்கை நுண்ணறிவில் தமிழ்

**நாள்** : 01.08.2025 **இடம்** : SMR கலையரங்கம் **நேரம்** : காலை 11:45

**நிகழ்ச்சிநிரல்**

- தமிழ்த்தாய் வாழ்த்து
- இறை வாழ்த்து
- வரவேற்புரை
- சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தல்
- சிறப்பு விருந்தினரைச் சிறப்பு செய்தல்
- துவக்கவுரை
- வாழ்த்துரை
- சிறப்பு விருந்தினரின் சிறப்புரை
- கேள்வி நேரம்
- பரிசு வழங்குதல்
- நன்றியுரை
- நாட்டுப்பண்

# கிரைஸ்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

கீழச்சேரி – 631402

**கணித்தமிழ்ப் பேரவை அறிக்கை 2025 – 2026**

கிரைஸ்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறையின் சார்பாக கணித்தமிழ்ப் பேரவையானது கல்லூரி நிர்வாகத்திடம் ஒரு மாதத்திற்கு முன்பாகவே அனுமதி பெற்று.01-08-2025 வெள்ளி அன்று காலை 11.45 மணி அளவில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் அரவிந்தன் அவர்கள், கலைப்புல முதன்மையர் முனைவர் சுரேஷ்குமார் அவர்கள், அறிவியல் புல முதன்மையர் அருட்தந்தை பிரதீப் கிறிஸ்டோபர் அவர்கள், ஆங்கிலத் துறைத்தலைவர் அருட்தந்தை மார்ட்டின் சார்லஸ் அவர்கள் மற்றும் பல்துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். திரு.சே அருண்குமார் தமிழப்பேராசிரியர் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி (அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி)– காஞ்சிபுரம். சிறப்பு விருந்தினராக இந்நிகழ்வில் பங்கேற்று செயற்கை நுண்ணறிவில் தமிழ் என்ற பொருண்மையில் சிறப்புரையாற்றினார்.

தமிழ்த்தாய் வாழ்த்தோடு நிகழ்வு தொடங்கப்பட்டு தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கோ. விஜயலட்சுமி அவர்கள் இனிய தமிழால் அனைவரையும் வரவேற்றார் . நம் கல்லூரியின் கலைப்புல முதன்மையர் முனைவர் சுரேஷ்குமார் அவர்கள் துவக்கவுரையாற்றி கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து அறிவியல் புல முதன்மையர் அருட்தந்தை பிரதீப் கிறிஸ்டோபர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.சிறப்பு விருந்தினரை பேராசிரியர் வெ.தாட்சாயிணி அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

சிறப்பு விருந்தினருக்கு துணை முதல்வர் முனைவர் அரவிந்தன் அவர்களால் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. ஆங்கிலத்துறைத்தலைவர் அருட்தந்தை மார்ட்டின்சார்லஸ் அவர்களால் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.


இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தகவல்களை தமிழில் விளக்கினார். மனிதனின் பகுத்தாய்வு, திட்டமிடல், உணர்தல், உள்ளுணர்தல், போன்ற செய்திகளையும் விளக்கி, இடையிடையே மாணவர்களை உற்சாகம் ஊட்டும் வகையில் கணக்கதிகாரம் பகுதியிலிருந்து தமிழ் சார்ந்த புதிர்களை மாணவர்களிடம் கேட்டது மாணவர்களுக்கு மேலும் உற்சாகத்தையும் தமிழ் மீது ஆர்வத்தையும் அளிக்கச் செய்தது சிறப்புக்குறியது. பின்னர் கேள்வி நேரத்தில் அவர் வழங்கிய சிறப்புரையிலிருந்து மாணவர்களுக்கு எழுந்த சந்தேகங்கள் கேட்கப்பட்டு சிறப்பு விருந்தினரால் அது தெளிவுபடுத்தப்பட்டது.


கணித்தமிழ்ப் பேரவை கருத்தரங்கத்தை முன்னிட்டு இணையமும் தமிழும் மற்றும் கணினி வளர்ச்சியில் தமிழ் ஆகிய பொருண்மையில் 18 ஜூலை 2025 அன்று நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற ஆறு மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர் அவர்களால் பரிசு வழங்கப்பட்டது.

தமிழ்த்துறை பேராசிரியர் ரா.ஜெயபிரியா அவர்கள் நன்றியுரை கூறினார்.தமிழ்த்துறை பேராசிரியர்கள் மற்றும் பிறத்துறை பேராசிரியர்களால் அரங்கினில் மாணவர்களின் ஒழுங்கு கண்காணிக்கப்பட்டது.நிறைவாக நாட்டுப் பண்ணோடு கணித்தமிழ்ப் பேரவை கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

வணிக நிர்வாக மேலாண்மை துறையின் இரண்டாம் ஆண்டு மாணவிகளான செல்வி. தமிழரசி மற்றும் செல்வி. தேன்மொழி ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். இந்நிகழ்வானது தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கோ விஜயலட்சுமி அவர்களின் தலைமையில், கணித்தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ரா.ஜெயபிரியா அவர்களால் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டது.


GPS Map Camera
Perambakkam, Tamil Nadu, India
2rq7+7mc, Perambakkam, Tamil Nadu 631402, India
Lat 13.038102° Long 79.814257°
01/08/2025 12:32 PM GMT +05:30
Google


GPS Map Camera
Perambakkam, Tamil Nadu, India
2rq7+7mc, Perambakkam, Tamil Nadu 631402, India
Lat 13.038102° Long 79.814257°
01/08/2025 12:33 PM GMT +05:30
Google


GPS Map Camera
Perambakkam, Tamil Nadu, India
2rq7+7mc, Perambakkam, Tamil Nadu 631402, India
Lat 13.038102° Long 79.814257°
01/08/2025 12:35 PM GMT +05:30
Google